430

உ

குகமயம்.

ஆசிரியர் அகத்தியனார் அருள்.

ஞானவெட்டி எனும் நூல்
திருக்குறளாசிரியர் திருவள்ளுவனாரால் எழுதப்படவில்லை
எனுந்தீய நாவுக்கு
ஓர்

ஆப்பு.

இஃது
கைலாயவர்க்கம்
அகத்தியனார் பரம்பரை
குழந்தையானந்தர் சீடன்
ஸ்வாமி குழந்தையானந்தனால் இயற்றப்பட்டு

ஜோலார்பேட்டை புதூர் நிவாசகரும் ஸ்ரீ ஆத்மபோதாநந்த
சங்கத்தின் பொது காரியதரிசியுமாகிய
ஸ்ரீலஸ்ரீ பு. ரா. தாசன்னு
அவர்களால்,
திருப்பத்தூர் நேஷனல் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

வி [Price As. 4.

1914.

ஆநந்த வருஷம் சித்திரைமீ.

Q26:417
M14
125120.

உ

குகமயம்.

ஆசிரியர் அகத்தியனார் அருள்.

---:o:---

முகவுரை.

தமிழர்களே?

இன்னூலெழுதும் காரணம் யாதெனினின்.

ஓரிரவு அயர்ந்து நித்திரை செய்யுங்கால், கனவினிடையில் நினைவே தோன்றுமென்பதற்கு மாராக, நினைவேயில்லாமையாகிய இவ்விடயம் கூரக்கருத்துக்கொண்ட ஓர் பெரியோர் எம்மைக்கூவி ஞானவெட்டி எனும் நூலைக்குறித்து உலகம் ஐய்யமுராலால் "ஞானவெட்டி எனும் நூல் திருக்குரளாசிரியர் திருவள்ளுவனாரால் எழுதப்படவில்லை எனும் தீய நாவுக்கு ஓர் ஆப்பு" எனும் ஓர் பெயர் புனைந்த நூலால் அவ்வையங்களை களைந்தெழுதுகவெனப்பணித்தனர் அவ்வாரே திருவருட் செயலாலும், பெரியோருசிகளினாலும் இன்னூலெழுதி முடிந்தது.

இதை அச்சிற்பதிப்பிக்கமுன் வந்த கனம் ஜோலார்பேட்டை புதூர் தாசண்ணா அவர்கட்கு இரைவன் அருட்செல்வம்வந்தடைக.

உலகமும் நன்றியுடையதாக யிருக்கட்டும்.

ஆசிரியர் அகத்தியனார் அருள்.

குழந்தையானந்தன்.

5120

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
3	3	நீக்குமாரு	நீக்குமாறு
4	9	குரளில்	குறளில்
4	9	யெனும்	யெனுந்தொகையில்
4	18	கிரித்தவ	கிறித்தவ
4	23	கிரித்தவமதம்	கிறித்தவமதம்
5	12	இதையரியும்	இதை அறியும்
,,	13	திரனுடையவரே	திரமுடையவரே
,,	16	யுனருங்கள்	யுணருங்கள்
,,	17	கர்ப்ப	கற்ப ....
6	8	இகபறத்தை	இகபரத்தை
,,	19	பறப்பரை	பரம்பரை
,,	23	ஷெ	ஷை
,,	31	விரித்தனர	விரித்தனர்
7	10	மாடியிருப்பதே	பாடியிருபபதே
,,	11	சிருகவாரியம்	சிறுகவாரியம்
,,	16	பரையென்பது	பறையென்பது
,,	22	மிழந்தவராகி	மிழந்தவராகி
8	11	பேரை	பெயரை
,,	15	நெரியரியார்	நெறியறியார்
10	1	துரந்தார்	துறந்தார்
,,	2	திரந்தாரை	திறந்தாரை
,,	,,	கூரின்	கூறின்
,,	19	வசசிரம்	வச்சிரம்
11	5	அரியாமல்	அறியாமல்
,,	13	அரிவதிக்	அறிவதித
11	16	காண்பதரிவு	காண்பதறிவு
,,	17	மறந்தானுண்டு	மரந்தானுண்டு
,,	,,	வேவறற்ருல்	வேரற்ருல்
,,	18	மறமதுவுந்	மரமதுவுந்
,,	21	யினிபரியாத	யினியறியாத
,,	,,	இரந்தவுடல்	இறந்தவுடல்
12	9	கர்ப்பம்	கற்பம்
13	13	மரையை	மறையை
11	10	பிரிந்த	பிறிந்த
,,	11	குருவரிந்து	குருவறிந்து
,,	12	நூரு	நூறு ....

முக்கிய கவனிப்பு:—இதில் சீர்திருத்தியிருக்கும் பிழை அன்றி யின்னும் சில சாணப்படினும் அல்லது வல்லின மெல்லினத்தையொக்கும் ஆதலின் இதைக் கண்ணுருவாரெல்லோரும் இலக்கண குற்றத்தை நோக்காது கருத்தை அறிந்துய்வீராக.

உ

குகமடம்.

ஆசிரியர் அகத்தியனார் அடிகள் துணை.

ஞானவெட்டியெனும் நூல் திருக்குறள் ஆசிரியர் திருவள்ளுவனார் எழுதியதே.

அறிவுடையீர்!

அகத்தியன் அடிகளை மனத்திலுன்னி இச்சிற்றறிவுடையேன் ஞானவெட்டியெனும் நூலைக்குறித்து விளையும் விபரீத சந்தேகங்களை நீக்குமாரு இதை வறைகின்றேன் மன்னிப்பீராக.

ஞானவெட்டியெனும் நூல் நம் கூட்டத்தில் நெடு நாட்களாக உலவி வருதல் எல்லோரும் அறிந்தவிடயமாயினும் பெரும்பாலர் அது வள்ளுவரால் எழுதப்படவில்லையென்று பின்வரும் வினாக்களால் மருக்கின்றார்கள்.

அவையாவன ?

(1) திருவள்ளுவர் சங்கத்தை எதிர்த்த தமிழ் பாடியவராகையினாலே அதைப்போன்ற சொற்சுவையும் இலக்கணச்சுவையும் ஞானவெட்டியில் காணப்படவில்லையெனவும்.

(2) கம்பன் முதலாகியவர் காலம் திருவள்ளுவருக்கு பிற்பட்டிருந்தும் ஞானவெட்டியில் அவரைகுறித்து பாடியிருத்தலினாலே வள்ளுவரின் நூல் அல்லவெனவும்.

(3) வைத்திய நூற்களை இவர் கையாட இவர் வைத்தியர் அல்லவெனவும்.

(4) இழிவருணத்தினர்போல் பாடியிருக்கின்றாரெனவும்.

(5) துரைசாமியெனும் வேறோர் குருவின் பெயரை குறித்தலினால் வள்ளுவர் நூல் அல்லவெனவும்.

(6) புலால் பட்சணம் கூடாது என்றவர் முயல், கவுதாரி முதலி யவை தின்னப்பாடுவராவெனவும் கூறாநிற்பர்.

இவைகட்கெல்லாம் யாம் தக்க ஆதாரம் கூறி பிறகு தலைப் பில் கண்ட விடயத்தை நிலை நிறுத்துவாம்.

திருவள்ளுவர் அகத்தியர் மாணாக்கராதலின் தம் ஆசிரியன் எவ்வாறு தாம் அகத்தியம் எனும் இலக்கண நூலிற்கு அய்யனா யிருந்தும் தம் சொற்களில் இனியவையாகவும் எல்லோரும் எளி தில் அறிந்துக்கொள்ளும் சுவையுடையனவாகவும் பன்னூல் எழு தினரோ அவ்வாறே தாமும் தாம் கூறிய குரளில் மருந்துயெனும் தொகையில் "மாறுபாடில்லாத உண்டி மருத்துண்ணினூறுபாடில்லை யுயிற்கு" என்று கூரியதை உலகோற்கு விரித்தலின் பொருட்டு சொற்சுவையும் அருட்சுவையும் பெற்ற மகா சித்தர் நூற்கள் போல் தாமும் நூல் எழுதினர் அந்நூலே ஞானவெட்டியெனும் இந்நன்னூலாம். ஆயின் அதற்கு ஞானவெட்டியெனும் பெயரே னாயிற்றெனின் அதை விரிக்குமுனம் ஞானவெட்டி எழுதிய காலத்தை ஆராய்வோம். ஞானவெட்டியெனும் நூலில் கம்பரை குறித்தும் அதிவீரராமபாண்டியரைக் குறித்தும் மாணிக்க வாச கரை குறித்தும் மகம்மதிய கிரித்தவ மதத்தை குறித்தும் கண்டி ருக்கிறது. கம்பரோ பதினோராம் நூற்றாண்டிலிருந்தவர். அதி வீரராமபாண்டியரோ சுமார் எழாம் நூற்றாண்டிற்கும் ஒன்பதாம் நூற்றாண்டிற்கும் இடையிலிருந்தவர். மாணிக்க வாசகரோ மூன் றாம் நூற்றாண்டிலிருந்தவர் மகம்மதிய மதமோ பத்தாம்நூற்றாண் டிலும் கிரித்தவமதம் பதினைந்தாம் நூற்றாண்டிலும் நம நாட்டுள் நுழைந்தன. ஞானவெட்டி எழுதிய திருவள்ளுவரோ முதலாம் நூற்றாண்டிலிருந்தவர் ஆதலின் ஞானவெட்டியெனும் நூல் பதி னைந்தாவது நூற்றாண்டிற்கு பின்னிட்டே எழுதப்பட்டிருக்க வேண்டும். அப்படியாயின் குறள் எழுதிய திருவள்ளுவர் இந் நூலை எழுத இவ்வளவு நாள் உயிர்த்திருந்தனரென்பது மனித வியல்பா என்பது தான் தற்காலம் நிகழும் சங்கை. இருந்தார் இருக்கின்றார் இருப்பார்யெனு முக்காலத்தை யாம் காரணங்கள் கொண்டு முழக்குவோம். கபிலர் இடைக்காடர் ஒளவை அதிக

மான் வள்ளி உப்பை உருவை இவரெல்லோரும் வள்ளுவர் காலத்தினராம். இவர்களில் ஔவையோ கருநெல்லிக்கனியுண்டு சாகாமையை பெற்றாள். இடைக்காடரோ சித்தரானார். கபிலரும் அப்படியே. அதிகமானும் அரைநெல்லிக்கனியுண்டு அதிக நாளிருந்தார். வள்ளியோ முருகோன் சீடையாயினள். உப்பை உருவை இவ்விருவரும் இன்னுமிருக்கின்றனர். ஆதலின் மேற்கூரியதில் அறுவர் இறக்கவில்லையெனல்துணிபு. ஞானவெட்டியில் "எத்தேசகாலமிருந்தேண்சாணுடல் மீறி பத்தாயிரம் வருடம் பாரிலிருப்பார் காண், உத்தமர்கள் சித்து விளைந்தூரிலிருந்துச்சிதமாய் கர்த்தனருள் சித்தி பெற்று காய சித்தி செய்வரே" எனக்கூரியிருப்பதால் வள்ளுவர் இவ்வளவு நாளிருந்தாரென்பதும் இருப்பாரென்பதும் விந்தையல்ல. சித்தர் நூற்குவுரை தெரிந்து கையாள்பவரே இதையரியுந்திரனுடையவரேயன்றி மற்றயெனையோற்கு விளங்காது ஆதலின் விரிக்காமல் விடுத்தனம். வள்ளுவர் நூலைப்படித்தோரே அவர் சொற்ற "அருமையுடைத்தென்ற சாவாமை வேண்டும் பெருமை முயற்சி தரும்" என்பதின் அர்த்தத்தையுனருங்கள். வள்ளுவர் குறள் எழுதிய பிறகு தாம் அனுபவித்த கர்ப்பசாதன ஞானயோகத்தை உலகோற்கு விரித்தனர். எக்காலமெனின் ஆரியரெனும் ஓர் வகுப்பார் வடமேற்கு எல்லையிலிருந்து நம் நாட்டில் புகுந்து நம் நற்குணங்களை தழுவி நம் நேர் விரோதங்களாய சட்டங்களை நம் அரசரை மயக்கி அவராதரவால் நிருவி நமக்கொருவர்க்கொருவர் பகைமை பாராட்டும் குணத்தை தூண்டி தமிழர்களின் அறிவு மிகுத்த சிவராசயோகத்தை கலைத்து தனிவத்துவோடு இரண்டரக்கலந்து தன்னையும் மறந்துவிடுதல் எனும் அத்வைத ஞானத்தை பரப்பி உண்மை ஞானத்தை ஒளித்து பல கடவுளரும் அக்கடவுளர்க்கு மனையாட்டி மக்கள் முதலானவையும் நேமித்து இன்னும் அநேக அசம்பாவிதத்தை நடைபெருவித்து ஊன்றிய காலமாம். இவ்வாறு வந்த ஆரியகொள்கையால் உண்மையானது மறைந்து தொன்று தொட்டு சிவராசயோகத்தை தழுவிய தமிழர்கள் தங்கட்குள் பலவித சமயம் ஆரியர் மபக்கம் கொண்ட அரசால் எற்பட பலர் அவைகளை தழுவி உன் தெய்வம் பெரிது என் தெய்வம் பெரிது எனும் கலகத்திலிணைந்து புறமதங்களை தழுவிய காலம் சீவகாருண்ணியத்தினால் வெளிவந்ததுஇந்நூல்.

இவ்வத்வைத ஞானத்தை வெட்டி சிவராஜயோகத்தை நிலை நிறுத் தலினலேயே தம் நூலிற்கு ஞானவெட்டியென்று பெயர் கூறி ஞர். தம் நூற்களாம் திருக்குறளில்" "அருமையுடைத்தென்ற சாவாமை வேண்டேல் பெருமை முயற்சி தரும்" என்றும் ஞான வெட்டியில் "சிரஞ்சீவி பதம் பெறவும் தெளிந்தேன் காணும் சேன காதி முனிவர்களின் செய்கையாலும் மறைத்து வைத்த புதைப் பொருளை மரைவில்லாமல் வசனிக்க அம்பிகைப்பெண் வாழ்த்தி என்னை இறப்பிறப்பும் இனி கடந்து இருளும் தாண்டி இகபறத்தை காண இடகலைபின் மாரி துரை பெணேனும் அமிர்தவடிவான சோதி சூட்ச சுகாதீதமேனக்குறைத்தாளாண்டே" என்றும், சாகாமை யையே பெருமையாக கூறியிருக்கும் ஐயன் தாம் இறந்தாரென்று கதையாக வழங்குவதை பிரமாணமின்மையாகிய போலிகதையா மென விடுக்க. இன்றைக்கும் ஞானவெட்டியெனும் நூலிற்கு உரை யறிந்தாரிடம் அடுப்போமானல் சாகாமையெனும் மூதோர் துணி புநம்மையடையும். சொற்சுவை பொருட்சுவை இந்நூலில் காண வில்லையெனும் படிப்பாளிகளே ஓர் சொல்லுக்கு உறை கூறுங்கள். உறை தெரியாமையினலேயே ஓர் நூலைப்பழியற்க. அதிநுட்ப மாகிய விடயங்களையேற்றிருக்கும் ஒவ்வோர் அறியபதங்களோ பறம்பரைமாணக்கரல்லாதவர்களுக்கு விளக்கமாகும் இல்லை இல்லை. ஆதலின் உலக முய்யும் பொருட்டு கூற வந்ததிறைலே இலக்கண முறண்களில்லாமையாய் பொருள் நிறைந்த நயவாசாக் களால் இந்நூலை விரித்தனர்யென விடுக்க.

இனிவள்ளுவர் பறம்பரை வைத்தியர் அல்லவேயென் பதை கவனிப்போம். வைத்திய நூற்களானவை கையாட பன் ஞளனுபவம் வேண்டுமாயினும் தெயவப்புலமை பெற்ற வள்ளு வருக்கு வேண்டுவதில்லை. தம் ஆசிரியனிடம் தாம் கேட்டவாறு திருமூலராதியோரால் உலக நன்மைக்காக நூல் வரைய வேண்டப் பட்டு தாம் எழுதிய குறளில் மருந்துயெனும அதிகாரத்திலும் இன்னும் சிலவிடங்களிலும் ஞான கற்பசாதனையை சுருக்கி கூறி மீண்டும் உலகத்தின் சிக்கையுடைக்க நூல் எழுதியபோது தம் மனுபவத்தையும் பன்னூர்களாற் விரித்தனா தமக்கு குறள் எழு தும் காலத்தில் அனுபவமில்லையென்பதை "மிகினும் குறையி னும் நோய் செய்யும் நூலோர் வளி முதலாவெண்ணிய மூன்று"

என்பதினுல் தாம் சொல்ல வந்ததை நூலோர்பேரில் ஏற்றிக்கூறினர். தாம்கூறிய கற்பசாதன காலங்களில் அபத்திபத்தினுல் பிணிகள்வரின் அவைகள் நீங்க மருந்துகள் கூறினரேயன்றி மரணமே உண்மையென்று தேரித்தெளிந்தவற்கு கூறவில்லை. மரணமடைவோனுக்கு மருந்து ஏனென்பதை ஆலோசியுங்கள். ஆதலின் வைத்திய நூற்களை கூறிய மகா சித்தர் தங்குருவாகிய குருமுனிவனுக்கு மாணுக்கராகையினுலே தாம் உலகமுய்யும் பொருட்டு இந்நூற்களையும் வெளிவிடலாமென்பது முறணுகாதாகையினுல் இக்கேழ்வியையும் வீணெனவிடுக்க.

இழி வருணத்தினர் போல் யாடியிருப்பதேனெனின் மூன்ரும் சங்க காலத்திருந்த தமிழோ சிருகவாரியம் கலந்ததாயினும் முத்தைப்போன்றிருந்தது. ஆண்டானடிமை எனும் தமிழ் பதங்கள் பெரும்பாலும் கையாளப்பட்டன. ஆண்டேயென்பது எல்லாம் வல்ல இறைவனையும் அவ்விறைவனே எவ்வகை தோற்றத்திலும் நிரைந்திருத்தலினுலேயே உலகோற்கு கூற வந்த போதும் ஆண்டேயென்ருர். பரையென்பது அனுதியாகிய வெளிக்கும் பெயராதலின் அவ்வெளிக்கதிகாரியாகி அனுபவத்தில் காண்டலினுலே பறையனென்றும் சகலமும் என் பறைக்குள்ளென்ருர். ஆரியமதம் இத்தமிழ் நாட்டில் மிகுத்திருந்த காலம் அம்மதத்தை தழுவாதவரெல்லோரும் ஊருக்கு புறம்பே ஒதுக்கப்பட்டு பறையர்கள் (வேரோ மதத்தை சார்ந்தவர்கள்) என்று மதப்பற்றுக்குட்பட்ட அரசர் கொடுங்கோலால் சர்வ சுதந்தரத்தையுமிழந்தவராகி காலம் முற்ற முற்ற எல்லாராலும் காரணமின்றி வெருக்கப்பட்டு அவர் முன் தமிழே கையாடிவர அதில் ஆண்டேயெனும் பிரயோகம் அடிக்கடி வருதலின் அவரை இக்கூட்டத்தில் சேர்த்து பரச்சிக்கும் பாப்பானுக்கும் பிறந்தாக பொய்க்கதை எழுதியிருக்கின்றனர். அச்சொற் பிரயோகத்தினுலே ஞானவெட்டியான் எனும் பெயரை அந்நூலிற்கு பிற்காலத்தாரால் சேர்க்கப்பட்டதேயன்றி வள்ளுவர் சொன்ன நூற்களிலெல்லாம் ஞானவெட்டியென்றே கூறுகின்ருர். ஆதலின் ஞானவெட்டியென்பதே தொன்மை பெயராம். கபிலர் எழுதிய அகவலிலோ அருந்தவ முனியாம்பகவற்கும் ஆதியெனும் கருவூர் பெரும்புலைச்சிக்கும் தாங்கள் உதித்ததாக எழுதியிருக்

கின்றார். இதன் உண்மையை ஆராயுங்கால் புலைச்சியென்பது புலால் உண்ணும் எல்லா ஜாதிகளையும் பொருந்தும். பகவன் என்பவர் தென்னாட்டு சித்தர் கூட்டங்களில் ஒருவராவர். வள்ளுவரின் கொள்கைப்படியே தன் தந்தை நன்மதியால் தன் தாயாகிய கருவூர் பெரும்புலைச்சியினிடம் சேரதானுதித்தனர். புலைச்சியென்பதில் பெரும்புலைச்சியென்கிறார். புலால் உண்பவள் அல்லது புலமையுடையவளென்னும் பொருந்தும். இதைகூர்ந்து பார்ப்போரே தீரவாலோசியுங்கள். உண்மைவெளிப்படும். சித்தற்கு பகவன்யெனும் பெயர் வருமாயென்பது "பகவனி கற்குரு முனி காலாங்கிதேரை" என்பதால் தெளியும். இனி துரைசாமியெனும் ஓர் குருவின் பேரை கூறுகின்றாரெனின் தான் உலக மயக்கங்களினிடையிலகப்பட்டு கடையில் தாம் குருமுனியால் தெளிவடைந்ததினாலே துரை அதாவது நான் மரணமாகிய கடலில் அமிழவிருந்தவனை கரையே போல் எனையாட்கொண்டு சா. சாதலை. மீ. மீரும்படி செய்தவனேயென்று தன்னாசிரியனை சிலவிடங்களில் புகழுகின்றார். ஆதலினாலேயே அது வேரே ஓர் மனிதன் பேராகாது பல்லாயிரவிடத்தில் தனக்கு அகத்தியரே ஆசிரியரென்று கூறுனின்றவர் துரைசாமியென்று வேறொருவரை கூறுவரா யில்லை இல்லை தன் குறவனையே இவ்வாறு புகழ்ந்தாரென விடுக்க.

இனிபுலால் உதவாதெனும் வள்ளுவர் புலால் அருந்தக்கூறிய தெங்கனமெனில் தாம் எழுதிய மருந்துகளை உலகோற் உண்ணுங்கால் அவர்களுக்கு கெடுதி வராவண்ணம் மாமிச பட்சணியாயவர்களுக்கு சில பட்சி ஜாதிகளையும் மிருக ஜாதிகளையும் உண்ணலாமென விதித்தனர். ஏனெனில் புலால் உண்பவரை முற்றும் விடவெனில் குரைகூறுவாரதலின் அப்புலாலுண்டே வளர்ந்தவாக்கை அப்புலால் தவரின் அவ்வலுவிலாக்காலத்தில் ஓர் வேளை கெடுதி செய்யும் எனும் நன்னோக்கத்தையே கருதி கூறினர் போலும். மேலும் உலகோற்கு வைத்திய முறையாக கூறவந்தவிடத்து சர்வத்திராளுக்கும் பொருந்தும்படியாக பத்தியம் கூற விதியிருத்தலின் வள்ளுவர் கூறியது நியாயமெனவிடுக்க.

இனிக்குறளில் கூறியதையே ஞானவெட்டியில் வள்ளுவர் விரித்தனரென்பதை விளக்குவாம்.

I ஒன்று.

திருக்குறள்.

(1) வானின்றுலகம் வழங்கிவருதலாற்
றானமிழ்தமென் றுணரற்பாற்று.

ஞானவெட்டி.

(1) அண்டமென்னபிண்டமென்ன அம்புவியாதீதமென்ன. கண்டதென்ன கேட்டதென்ன காருவில்லாமாரியுண்டோ, எண்டிசையெல்லாஞ் செனித்த இந்திரிய உப்புமயம், நின்ற உப்பு வாரியினால் நீடுலகெலாமுவமே.

திரு (2) நெடுங்கடலும் தன்னீர்மைகுன்றும்
தடிந்தெழிலிதானல் காதாகிவிடின்.

ஞான (2) மயமானஉப்பு கடல்சூழ்ந்து வாரிதிமாலின்மயம்
செயலான சாரமதி சந்திரசோதி திருநடனம்
நியமிந்த வாழ்க்கை நிராமயத்துப்பு நெரியரியார்
கயமான கைப்பு உலகமெல்லாமிந்த காரணமே.

திரு (3) நீரின்றமையா துலகெனின்
யார்யார்க்கும் வானின்றமையாதொழுக்கு.

ஞான (3) உப்புமய மப்புமய மோகோ நாதவிந்தின்மயம்
இப்புவியெல்லாம் சனித்த இந்திரிய வாழ்க்கைமயம்
கைப்பிதுவில்லாமல் செகங்கண்டதென்ன காண்கி
[லென்ன
முப்பது காணுதியிலும் முடித்து வைத்தாரீசனுமே.

II. இரண்டாவது.

திரு (1) ஒழுக்கத்து நீத்தார்பெருமை
விழுப்பத்துவேண்டும் பனுவற்றுணிவு.

திரு (2) துறந்தார்பெருமை துணைக்கூறின்வையத்
இறந்தாரை யெண்ணிக்கொண்டற்று.

ஞான (1) வழியோனி முடியுர்ந்தியின் வாசல்வரும் பெரியோர்க்
கழிவில்லை தேகம் மூற்றைக்குழிய துங்கலைபிறளா
பொழிமலர் வாசமதிமலர் வீசும் புகழுடையா
ருழிவதுமில்லையபா னனுதைத்த துணர்ந்திடுவேன்.

திரு (1) பொருத்தலிரப்பினை யென்று
மதனைமரத்தலதனினு நன்று.

(2) தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய
மன்னுயிரெல்லாம் தொழும்.

(3) உற்றநோய்நீக்கியுறு அமைமுற்காக்கும்
பெற்றியார் பேணிக்கொளல்.

(4) மாறுபாடில்லாத வுண்டிமறுத்துண்ணி
னூறுபாடில்லை உயிர்க்கு.

(5) அருமையுடைத்தென்ற சாவாமை
வேண்டும்பெருமை முயர்ச்சிதரும்.

ஞான (2) யோகமொருவருஷம் பனிரெண்டாண்டென்னில் உதக
மதுயிரங்கு முடலழிவோயில்லை, தேகமழியாதுயிர்காண் சடமே
வசிரம் சித்தர்களிலிவனொருவன் தேவனச்சு, சாகாமலிருந்திட
லாம் வினைதான்போச்சு சத்திசிவதீட்சையினுல் சாக்காடில்லை,
ஆகமத்திலொளித்துவைத்த பொருள்தானுண்டே அகத்தியரால்
யானறிந்து அருள்பெற்றேனே.

III. மூன்றுவது.

திரு (1) வேண்டி னுண்டாகத்துறக்க
துறந்தபினீண்டியர் பாலபல.

(2) தலைப்பட்டார் தீரத்துறந்தார்
மயங்கிவலைப்பட்டார் மற்றையவர்.

ஞான (1) இகத்தாசை பாசமிருந்தென்னூரு முழன்றிடுவோர்க் கெய்தாதொன்றும், நகைநகைத்து மினுமினுக்கும் விழிசிமிட்டி வறவழைத்து நாணம்செய்யும், புகைசூழ்ந்து இருள்மூடி மாய்கை யினிலழிந்தி மிகப்போவாராகில், அகத்திலிருந்தருள் தீபவொளி அரியாமல் அமைத்தாராண்டே.

IV. நான்காவது.

திரு (1) ஓர்த்துள்ளமுள்ள துணரினொருதலையாய்
பேர்த்துள்ள வேண்டாபிறப்பு.

ஞான (1) இருவினையும் தனையுரைத்து யுலகத்தாசான் இரந்த வுடல் விழுந்தாவிபிரிந்தபின்பு, மருசெனனமாகி வந்துடலெடுத்து வாழ்புவியில் வருவோமென்று வகுத்துசொல்வார், குருவரிந்து புவியில்வந்து வயது நூருக்குரையாக பிறந்திருந்தால் குழந்தை யாமோ, அரிவதிதநற்பிறவி பிறப்பாரென்று மதித வெகுபொருள் களெல்லாம் பரிப்பாராண்டே.

திரு (2) பிறப்பென்னும் பேதமைநீங்கச்
சிறப்பென்னும் செம்பொருள்காண்பதரிவு.

ஞான (2) வித்திருந்தால் விளைவுண்டு மறந்தானுண்டு வேறற்றால் மறமதுவுந்துளுக்குமோசொல், சத்தியமா மொழியவுங்கா ணுண்டேகேளீர் சாத்திரத்தை மெய்யெனவு நம்பொணுது, செத் தசவமுயிரொடிங்கி நின்றபோது சிருமதலையாய் புவியிர்ப்பிறப் பதேது, இத்தையினிபரியாத வுலகத்தாசான் இராந்தவுடல்பிறக்கு மென்று யியம்புவாறே.

V. ஐந்தாவது.

திரு (1) ஊழிர்பெருவலியாவுள மற்றொன்று
சூழினும் தான்முந்துரும்.

திரு (2) ஊழையுமுப் பக்கங்காண்பர்
உலைவின்றித்தாழாது ஏற்றுபவர்.

VI. ஆறுவது.

திரு (1) தெய்வத்தாலாகா தெனினும்முயர்ச்சிதன்
மெய்வருந்தக் கூலிதரும்.

ஞான (1) நல்வினை தீவினைக்கவிழ்தல் கர்ப்பமாச்சு
நாடினபேர் யெல்லோருக்கும் ஞானமாச்சு.

VII. ஏழாவது.

திரு (1) புணர்ச்சிப் புகுதல்வேண்டா
வுணர்ச்சிதா நட்பாங்கிழமைதரும்.

ஞான (1) மாமாந்த கர்ப்பம் பனிரண்டுமாண்டு வருந்திடினும்
நான்மாத்திரம் கடுகளவு பிரமாணம் நடந்தரியேன்
தேன்மொழி வேல்விழிமாதர் சம்போகம் செய்திடினும்
தான்போய் மாணம் சுடுகாடுயேகும் சவமதுவே.

VIII. எட்டாவது.

திரு (1) அரவாழி யந்தணன்தாள்
சேர்ந்தார்க்கல்லார் பிறவாழிநீந்தலரிது.

ஞான (1) பச்சையென்ற வுப்பதுவும் பார்த்தாலும் துய்யவெள்ளை
உச்சிதமாய் கொண்டுருகி வுண்டதொரு வுப்பதுகாண்
வைச்ச பொருளாதியிலும் வாருதியினால் செனித்த
தற்சொரூபமாய் விதிக்குஞ் சங்கையிதை காண்கிலரே.

இனி ஞானவெட்டியிலும் அதைச்சார்ந்த மற்றைய நூர்க்களிலும் குறள்பாடியதாக கூறுகின்றனராவெனவாராய்வாம். இவர் கூரிய நூர்க்களாவன ஞானவெட்டி 1500 வைத்திய ரத்ன சிந்தாமணி 800 பஞ்சரத்தினம் 500 செநிறகிதம் 300—200 செவனமணி 100 சூத்திரங்கள் 80, 50, 30, 16, 10 ஆம். ஆயினும் சில நூர்க்கள் இன்னும் அச்சிலகப்படவில்லை. வந்தவரையும் ஆராய்வோம்.

ஞானவெட்டியில் 1328-வது பாட்டில்
" அம்புவியில் குறளடியேன் பாரோளில்
அநேகபேரேனை யெதிர்த்து வுரைதான்கேழ்க்க " என்றும்,

சிந்தாமணியில் 587-வது பாட்டில்
"கேடியானதோர்க் குறட்பாடியும்
மூலகங்களில் மொழிகாண்கிலே சத்தது" என்றும்.

சூத்திரம் 30-ல் "ஆமேதா நீரடியாய் சொன்ன வேதம்
அதுபோதும் ஞானத்தை யறிவோனுக்கு" என்றும்.

சூத்திரம் 16-ல் "கேளப்பாயீரடியாய் வேதம்
சொன்னேன்" என்றும் கூராநிற்றலினால்
தாம் கூறிய முதல்நூலை பின்கூறிய மற்றய
நூல்களிலும் விதிப்படி கூறினாரென்க.

ஆதலின் ஞானவெட்டியெனும் நூல் திருக்குறள் ஆசிரியர் திருவள்ளுவனார் பெழுதியதே.

விறிவஞ்சி விடுத்தனம்

இனியாவது நம் தமிழ் நாட்டில் தமிழ் மறையை விரித்த நம் தந்தை அமுதைப்போன்று தந்த சுந்தர நூலாகிய ஞானவெட்டியை உலகிர் நீர் ஆராய்ந்து கடைத்தேருவீராக

தன்னூலாய்ந்தோர் தாளென் முடியே.

குழந்தையானந்தன்.

உ

சாகாக்கல்வி.

உலகிர்!

தோற்றத்தைக்குறித்து எம்மபிப்பிராயத்தை பெரியோர் நூலை மேற்கோளாகக்கொண்டு உரைப்போம்:—

உலகத்தோற்றம் ஒடுங்குங்கால் ஒவ்வொன்றும் அணுமாத்திரமாகக்குறைந்து வெளியிலடங்குதலின் தோற்றத்திற்கு முன் வெளியிருந்த தென்றுணிபு. அவ்வெளி விளக்கமாக வொளி வேண்டலின், வொளியே காரணமாக நின்றது. ஆய்ந்திடின்,

அவ்வொளி மறையவிருள்கப்புதலினால் எவ்வத்துவுக்கு முந்தினது இருளாம். மேற்கோள் "ஆதி ஆரபாரமாயுலகிலிருள் தான் மூடி" என்பது ஞானவெட்டி. அவ்வாறாயின் ஒளி முழுங்கியவிருள் நிரைந்த வெளியேதொன்மைத்து. மேற்கோள் "வெட்ட வேளியை மெய்யேன்றறிந்தார்க்கு பட்டய மேதுக்கடி" என்றார் குதம்பைசித்தர். இனி தோற்றமெவ்வாறெனின் அனாதியாயவிருள் ஆதியாய வெளி வொளி இம்மூன்றும் ஒன்றாகிய விருளிலிருந்து தோன்றும். ஆதி-ஆ-ஆகாயமாகிய வெளி, தி-நெருப்பின் முனையாகிய வொளி அவையிரண்டும் தோன்றிய காலமெனலும், அனாதி இவையிரண்டுமில்லாமையாகிய விருள்கப்பிய காலமெனலும் பொருந்தும். ஒன்றாயவிருள் என் விரிந்ததெனின் அது எவ்வேலையும் அசைந்துக்கொண்டே யிருத்தலின் உலகதோற்றமும் ஒடுக்கமும் உண்டாகா நிற்கும். அப்படி அசையாமலிருந்ததாவெனின். ஆ!! நன்று கடாவினாய்!! அது அசையும் தன்மையற்றதெனின் இவ்வியவகாரங்கள் நடைபெறாவே. அப்படியிருந்ததேல்மீண்டும் அதை ஆட்டுவிப்பான் வொருவன் வேண்டுமே அப்படி ஒருவன் உண்டெனின் முடிவின்மை எனும் குற்றம் விளையுமே. ஆதலின் எப்போதும் அந்த மூன்றும் ஒன்றாயவத்து அசைந்துக்கொண்டேயிருக்கும் அன்றி நிற்காது. அப்படி அசைதலாலேயே தோற்றமும் ஒடுக்கமும் மீண்டும் மீண்டும் உண்டாகா நிற்கும். அப்படியாயவிருள் அசைய உள்ளடங்கிய ஒளி முனையில் தோன்றும். உடனே வெளி தோன்றும். வெளியாகிய வொலியும் அதாவது நாதமும், ஒளியாகிய விந்தும் வெளிப்பட்டே இருள் மறையும். மேற்கோள் "விந்துநாதம் விதித்த அவ்வாறினால் அந்தகாரமது வேளியாச்சுது" என்று ஞானவெட்டி கூரும். வெளியாகிய இடமும், ஒளியும் தோன்றின் அவ்வெளியிருந்து ஒலி உதிக்கும் அவ்வொலியேக்காரணமாகக்கொண்டு உருவம் தோன்றி முறையே ஐந்து மா பூதங்கள் தோன்றும். ஒன்றுடனொன்று அவை ஒடியிணைய இப்புவியாதிகள் உண்டாகும். இவைநிற்க, எல்லோரும் வந்திக்கும் இறைவனியாரெனவாராய்வோம். ஒளியின்றி ஒன்றும் விவகறிக்காதெனின் அதனையே கடவுளென்றார் கற்று ஆய்ந்தோர். மேற்கோள் "அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்" என்றார் தாயுமானாரும். "அலகில் சோதியனம்பலத்

தாவோன்'' என்பது சேக்கிழார் ஸ்வாமிகளுக்கு தமிழ்த்தெய்வம் அடியெடுத்துகொடுத்த பாவிலுள்ளது. அவ்வொளியையே இச் சீவர்குழாம் தம்முட் நோக்கின் அவ்வுருவடைவரென்பதுண்மை. மேற்கோள் "உள்ளொளி தோன்றிலுணறிலருளொளி அவ்வொளி யாதியொளி'' என்பது மூதாட்டியின் குறள். இனி மக்கட்பிர விக்கு காரணமாயகல்வி சிறப்பையாருய்வாம். அறிவுடையோரு ருய்ந்து நிருவிய கொள்கையோ வியப்புடைத்து. தோற்றத்துள் ஒலி ஒடுங்கியிருந்தகாலம் அவ்வொலியையே "ம்'' எனும் ஊமை யெழுத்தென்றனர். இருவகையிலும் இதை விவகறிப்போம். ஒன்று. பெருவெளிகளில் காற்றுவேகமாக வீசக்காண்போர் உற் றுக்கேட் பின் "ஓம்'' எனும் சொல்விளங்கும். வேகத்தினு லெழும் அவ்வோங்காரமானது வேகமடங்கின் கடையாகிய "ம்'' நிலையையடையும். இரண்டு. நம்முடலில் காற்று வீசுமகுழை களையும் அதைச்சார்ந்தவைகளையும் அடைத்துக்கொண்டு பேச ..யல்வோமாயின் "ம்'' என்பதே விளங்கும். ஆதலின் தொன்மை ..லி விசரி எழுந்தகாலம் "ஓம் எனவாயிற்று''. இவ்வூமையில் தோன்றிய பேசுமெழுத்தே நம் தமிட் பாடையில் முதல் கண் டது. ஆதலின் உலகில் முதல் பாடைதமிழாகவேயிருந்து மற் றவையெல்லாம் அதினிடம் தோன்றிற்றெனல துணிபு. மேற் கோள் "மொழியுளமறியாச் சிவவுணர்வார், தனியியன்மறைமுன் சாகாக்கல்வியாய், ஐந்தக்கரத்திலமையுந் தமிழ்மொழி, ஒலிவடிவாகி வுலவுமநாதியில்'' என்று கூறுவர் கழாரம்பர். பிறகு அவ்வெ ழுத்தோ (ஒ என்பது அ—உ) என்று இரண்டாக பிறிந்து மீண் டும் ஆ, இ, ஈ, ஊ, எ, ஏ, ஐ, ஔ, என்று எண்வகையாயிற்று. மேற்கோள் "முதலேழுத்திருவகையாகி யேண்வகையாம்'' என்றார் அகத்தியனார் போகத்தியத்தில். பின்பு சார்பெழுத்துக்கள் உண் டாயின. இனி அவ்வொளியை நம்முள் காண்பதெப்படியென வாருய்வாம். ஒளியைக்காணவெனில் வெளியை நம்முள் காண் போமாக. நாம் இதுவரை மரந்த சிலவிடயங்களை மீண்டும் கொடு வர வாருயுங்கால் நம்மனத்திேனாட்டத்தை நிருத்தி நம் நாசிக்கும் நெற்றிக்கும் நடுவே நம்மெண்ணத்தை பொருத்த, வெளியிலடங் கியிருக்கும் விடயங்கள் உள்வந்து குதித்தலை கண்டோமல்லவோ!! அவ்வாரே நம்மெண்ணத்தையும் கண்களையும் அவ்வாரே

பொருத்திருமையின் வெளியின் வெளி உள் வந்து குதித்து அவ்வெளியில் வொளி வந்து குதித்து மீண்டும் நோக்க நோக்க பெருவொளியாகுமென்பது உண்மை. மேற்கோள் "வெளியில் விளைந்த விளவின்கனிதான் ஒளியிலோளியாயுறும்" "மின் மினிப்போன்ற விளக்காகத்தான்றேன்றில் "அன்னப்பறவையேயாம்". என்று கூறும் நம் கிழவியின் குறள். "வழிபடும் மெய்ஞ் ஞானம் வாய்க்கும் வழி கேளாய், சுழினையெனுமவ்விடங்கருத்தும் விழிவைக்குஞ் சாதகத்திலாண்டோன்று தப்பாமற் சாதிக்கிற், பேதகமோன்றில்லேப்பிடி" என்றூர் ஆசிரியர் அகத்தியனுரும் தம்மதி வெண்பாவில். இதன் உண்மை பழக்கத்தில் தெரியும். நாமென்பது யாதெனவாருய்வோம். நாமென்பது ஒலியாகையினுலே ஒலி வடிவெனலே பொருந்தும். இதையும் தீரவாருய்ந்தறிவீருக. ஒலிக்கு காரணம் ஒளியாதலின் ஒலியுடைய ஒளியே நாமென்பதாம். இனியிதை படிப்போரே இவ்வாக்கையுளபோதே கண்டு தெளியுங்கள்.

இறைவனருள் நமக்கிரங்கட்டும்.

குழந்தையானந்தன்

அல்லது

குழந்தைவேலன்.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
5	16	உனருங்கள்.	உணருங்கள்.

175120